**முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 844/2019**

**Witness PW 1**

| பெயர் | அம்பிகா | தொழில் | |
|---|---|---|---|
| க/பெ | ஸ்ரீகாந்த் | வயது | |
| ஊர் | | தேதி | 16.02.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (16.02.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு  விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் பிரதிவாதியிடம் கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்காததால் அதனை கேட்டு வழக்கு போட்டுள்ளேன். எவ்வளவு ரூபாய் என்று சொன்னால் மொத்தமாக 4 லட்சம் என்று சொல்லியுள்ளேன். இந்த வழக்கை பொருத்தவரையில் 2 லட்சம் ரூபாய்க்கு தாக்கல் செய்துள்ளேன். 4 லட்சம் ரூபாய் தவிர்த்து வேறு ஏதேனும் கடன்கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்றாலும் கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும்சரியல்ல. நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சமயல் ஆர்டர் எடுத்து செய்துவருகிறேன். எனது கணவர் வேலைக்கு செல்லவில்லை என்றால் செல்கிறார். என்ன வேலை செய்கிறார் என்றால் கோவில்களில் பூஜை

செய்து வருகிறார். ஏதாவது கோவிலில் பூசாரியாக வேலை செய்து வருகிறாரா என்றால் குருக்களுக்கு உதவியாளராக இருந்து வருகிறார்.இந்த வழக்கில் உள்ள கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு முன்பே வேறு ஒரு கடன் கொடுத்து அதன் பேரில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி அந்த வழக்கு முடிந்துவிட்டது. நானும் எனது கணவரும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம். ஏற்கனவேஎனது கணவரால் தாக்கல் செய்த வழக்கில் வட்டி மட்டும் முதல் கொடுக்கவில்லை என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. கடனுறுதி சீட்டில் பிரதி மாதத்திற்கு ஒரு சதவீத ரூபாய் வட்டி கொடுக்க வேண்டும் என்று எழுதப்படும் என்றால் சரி. வட்டித்தொகையை திருப்பி செலுத்தாதவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் நான் நம்பிக்கை முறையில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். நான் நம்பிக்கை அடிப்படையில் எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே கடன் தொகை நிலுவையில் உள்ள சமயத்தில் மீண்டும் கடன் கொடுக்க எந்த வாய்ப்பும் இல்லை என்றுசொன்னால் சரியல்ல.கடனுறுதி சீட்டு விழுப்புரத்தில் எந்த இடத்தில் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க ஒரு அளவுக்கு தெரியும். நான் தாக்கல் செய்த வழக்குரையில் எனது வீட்டில் வைத்து எழுதப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி விழுப்புரத்தில் வைத்து எழுதப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எனது வீட்டில்வைத்து கடனுறுதி சீட்டு பிரதிவாதி எழுதி தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்குறிப்பு எங்கு வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரி

விழுப்புரம் என்று சொல்லப்பட்டுள்ளது. கடனுறுதி சீட்டின் யார் பணத்தை வரவு வாங்குகிறார்களோ அவர்கள் தான் எழுதி கையொப்பம் செய்வார் என்று சொன்னால் பிரதிவாதி தான் எழுதிகையெழுத்து செய்வார். கடனுறுதி சீட்டு எழுதப்பட்ட தேதியிலோ அல்லது வரவு வைக்கப்பட்ட தேதியிலோ சாட்சிகள் கையொப்பம் செய்யவில்லை என்றால் செய்யவில்லை பிரதிவாதியே அவரது கைப்பட எழுதியுள்ளார். நான் சொல்வது போல் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டு இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றுசொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் குறிப்பிட்டுள்ள பணத்தை எந்த தேதியில் யார் முன்னிலையில் கேட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரி ஆனால் பல முறை கேட்டுள்ளேன். பலமுறை கேட்டதாக நான் பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் முதல் முறையாக வழக்கறிஞர் அறிவிப்பில் தான் கேட்டுள்ளேன் என்று சொன்னால்சரியல்ல. அதன் பேரில் தான் பிரதிவாதிக்கு மோசடியாக கடனுறுதி சீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் வரவு வைக்கப்பட்ட தேதி என உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது இல்லை என்றுசொன்னால் எனது கடனை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அதனை மறுக்கிறார்.நான் பிரதிவாதிபெயரில் இல்லாமல் வேறு சில நபர்கள் பெயரிலும் கடனறுதி சீட்டு அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. வேறு சில நபர்கள் என்பதில் கதிர்வேல் என்பவரும் உள்ளார் என்றால் சரி.கதிர்வேலுக்கும் எனக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டது என்றாலும் அதில் எனக்கும் கதிர்வேல் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்பதால் தான் பிரதிவாதிக்கும் எனக்கும்

பிரச்சனை ஏற்பட்டது என்றால் கதிர்வேல் என்பவருக்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நான் கூடுதலாக தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும்இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் உள்ளது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram